# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092347

1. District மாவட்டம் : Pudukkottai    PS: காவல்நிலையம் : V & AC.,    Year: ஆண்டு 2020    FIR No. மு.த.அ. எண் : 01/2020    Date: நாள் 24-02-2020

2. (i) Act சட்டம்: Criminal Proceedure Code    Sections பிரிவுகள்: 102 CrPC r/w
   (ii) Act சட்டம்: and PC (Amendment) Act    Sections பிரிவுகள்: Sec. 7 of Prevention
   (iii) Act சட்டம்: 2018.    Sections பிரிவுகள்: of Corruption (Amendment) Act 2018.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 24-2-2020    Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 19.00 hrs.    Time to : நேரம் வரை 22.30 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24-02-2020    Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    Computer typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Office of the AD(Audit), Collectorate, Pudukkottai, 1 km. North East.
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. Puviyarajan    (b) Father's/Husband's Name : தந்தை / கணவர் பெயர் Siva Prakasam
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு —    (d) Nationality : நாட்டினம் INDIAN    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Zonal Deputy Tahsildar, Pudukkottai    (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) Tr. Ganapathy, AD (Audit), 2) Tmt. Sridevi, Assistant, 3) Tr. Thangaraj, Office Assistant, 4) Tr. Palaniyappan, Driver. All are AD (Audit) office, Collectorate, Pudukkottai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)

Seizure Amount Rs. 24,800/- and 4 gms. Gold Coin.

10. Total value of properties stolen / involved :

11. Inquest Report / U.D. case No., if any

12. F.I.R. contents (Attach separate sheet, if required)

<u>பணிந்து அனுப்பப்பட்டது:</u>

இன்று (24-02-2020)ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு பார்டியினரும் சேர்ந்து மாலை 07.00 மணி முதல் இரவு 22.30 மணி வரை புதுக்கோட்டை உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து 23.00 மணிக்கு ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகார் மனு பின்வருமாறு:- அனுப்புநர் திரு.புவியரசன், வயது 37/2020, த/பெ சிவப்பிரகாசம், மண்டல துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை மற்றும் ஆய்வுக்குழு அலுவலர், புதுக்கோட்டை, பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை, அய்யா, புதுக்கோட்டை மாவட்ட உதவி இயக்குநர் (தணிக்கை) அவர்கள் இன்றைய தினம் தணிக்கை தடை நீக்கம் செய்வதற்காக 13 ஊராட்சி ஒன்றியத்திலிருந்து வந்திருந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்) மற்றும் உதவிப்பொறியாளர்கள் கணக்கர்கள் ஆகியோர்களிடம் லஞ்சம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ... to take up the investigation / Refused investigation / transferred to P.S. ... on point of jurisdiction.

F.I.R. read over to the complainant / informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

V. [signature] 24/02/2020.

Signature of the Officer in-charge, Police Station

காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb impression of the Complainant / Informant

Name பெயர் V. TAMIZHARASHI

Rank நிலை Inspector of Police

VAAC., Pudukkottai

25/02/2020.

பெற்றுக்கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதல் தளத்தில் அமைந்துள்ள அவரது அலுவலகத்திலிருந்து புறப்பட்டு அரசு வாகனம் டி.எண்.55 ஜி 0379 என்ற பொலிரோ வாகனத்தில் வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து மெயின் கேட் செல்லும் சாலையில் வைத்து நானும், திரு.பாண்டி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை ஆகியோர் முன்னிலையில் புதுக்கோட்டை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையில் மேற்படி வாகனத்தை நிறுத்தி பார்க்க அதில் மேற்படி உதவி இயக்குநர் (தணிக்கை) திரு.கணபதி, உதவியாளர் திருமதி. ஸ்ரீதேவி, இளநிலை உதவியாளர் திருமதி.விஜயசாந்தி மற்றும் அலுவலக உதவியாளர் திரு.தங்கராஜ் ஆகியோர் இருந்தனர். மேற்படி வாகனத்தின் ஒட்டுநர் திரு.பழனியப்பன் என்பவர் இருந்தார். அவர்களிடம் அறிமுகம் செய்தும், மேற்படி இடம் சாலையாக இருந்ததாலும், வெளிச்சம் குறைவாக இருந்த காரணத்தாலும், அந்த இடத்தில் சோதனை மேற்கொள்ளவும், நடவடிக்கைகள் தயார் செய்ய முடியாத காரணத்தினால் மேற்படி வாகனத்துடன் சுமார் 200 மீட்டர் தொலைவில் உள்ள புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள உதவி இயக்குநர் (தணிக்கை) அவர்களின் அலுவலக அறையில் வைத்து சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சோதனையின் போது உதவி இயக்குநர் (தணிக்கை) என்பவரை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த மெருன் கலர் பேண்டின் வலது புற பாக்கெட்டில் இருந்து ரூ.500/– நோட்கள் அடங்கிய ஒரு கத்தையை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணி பார்க்க அதில் ரூ.10,000/– (20X500=10,000) இருந்தது. மேலும் அவர் கையில் வைத்திருந்த மெருன் கலரில் Season என்று எழுதப்பட்ட கைப்பையில் இருந்து ரூ.3,620/–(7X500=3500, 1X100=100, 1X20=20) ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் மேற்படி கைப்பையை சோதனை செய்து பார்க்க அதில் பிங்க் கலர் பேப்பரில் மடிக்கப்பட்ட சுமார் 4 கிராம் எடையுள்ள தங்க நாணயம் இருந்தது. அந்த நாணயத்தில் ஒரு பக்கத்தில் பிள்ளையார் படமும், மறுபக்கத்தில் லெஷ்மி படமும் இருந்தது. இது பற்றி அவரிடம் விசாரணை செய்ய அவர் தினந்தோறும் சிவகங்கையில் இருந்து அலுவலகம் வந்துவிட்டு வீட்டிற்கு சென்று விடுவதாகவும், ஏதாவது முக்கியமான அலுவல் இருந்தால் அறை எடுத்து தங்குவதகவும் தெரிவித்தார். மேலும் காலையில் வீட்டிலிருந்து வரும் போது ரூ.620/– எடுத்து வந்ததாகவும், அதில் மதியம் ரூ.100/– செலவு செய்தது போக மீதி ரூ.520/– வைத்திருந்ததாக கூறினார். மேற்படி பணம் ரூ.520/–ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மீதி தொகை ரூ.13,000/–ம் மற்றும்

தங்க நாணயத்தை பற்றி விளக்கம் கேட்க சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி பணம் ரூ.13,000/– மற்றும் 4 கிராம் தங்க நாணயமும் கைப்பற்றப்பட்டது.

உதவியாளர் திருமதி.ஸ்ரீதேவி, த/பெ நடராஜன் அவர்களை விசாரணை செய்ய அவரது சொந்த ஊர் திருச்சி மாவட்டம், துறையூர் என்றும், புதுக்கோட்டை மேல 2ம் வீதியில் உள்ள அரசு மகளிர் விடுதியில் தங்கி அலுவலகத்திற்கு வந்து செல்வதாகவும் தெரிவித்தார். அவர் கையில் வைத்திருந்த கருப்பு மற்றும் சிவப்பு நிறம் கலந்த கைப்பையை சோதனை செய்ய ரூ.7,260/– (14X500=7,000, 2X100=200, 2X20=40, 2X10=20) இருந்தது. அதை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க ரூ.300/– காலையில் அலுவலத்திற்கு எடுத்து வந்ததாகவும் அதில் ரூ.40/– செலவு செய்தது போக மீதி பணம் ரூ.260/– என்றும் கூறினார். மீதி பணம் ரூ.500 நோட்கள் அடங்கிய ரூ.7,000/– பற்றி கேட்க சரியான முகந்திரம் தெரிவிக்காததால் மேற்படி பணம் ரூ.7,000/– கைப்பற்றப்பட்டது. மீதி பணம் ரூ.260/–ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

இளநிலை உதவியாளர் திருமதி.விஜயசாந்தி, த/பெ ரெத்தினம் அவர்களை விசாரணை செய்ய அவரது சொந்த ஊர் அறந்தாங்கி தாலுகாவில் உள்ள கண்டிச்சான்காடு என்றும், தற்போது திருவப்பூரில் உள்ள பழனியப்பா அபார்ட்மெண்ட்ஸில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியிருந்து அலுவலகம் வருவதாகவும், வார இறுதி நாட்களில் மட்டும் சொந்த ஊருக்கு சென்று வருவதாக தெரிவித்தார். அவர் கையில் வைத்திருந்த மெருன் கலர் கைப்பையை சோதனை செய்ய ரூ.1,040/– (2X500=1,000, 2X20=40), இருந்தது. அதை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க நேற்று தனது கனரா வங்கி கணக்கிலிருந்து ஏடிஎம் கார்டு மூலம் ரூ.1,000/–ஐ எடுத்து செலவுக்காக வைத்திருந்ததாகவும், மீதி ரூ.40/– ஏற்கனவே தனது கைப்பையில் இருந்ததாகவும் கூறினார். அது குறித்து அவர் வைத்திருந்த அவருடைய ஹவாய் செல்போனில் வந்திருந்த குறுஞ்செய்தியை பார்வையிட ரூ.1,000/– எடுத்ததற்கான குறுஞ்செய்தி வந்திருந்தது. எனவே அவர் வைத்திருந்த தொகை ரூ.1,040/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அலுவலக உதவியாளர் திரு.தங்கராசு, த/பெ முத்துவீரன் அவர்களை விசாரணை செய்ய அவாது சொந்த ஊர் ஆலங்குடி தாலுகா கீழாத்தூர் என்றும், 11 ஆண்டு காலமாக உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வருவதாக கூறினார். அவரை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த வெள்ளை நிற இடது மேல்சட்டை பையில் இருந்து ரூபாய் நோட்கள் அடங்கிய ஒரு கத்தையை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்க்க அதில் ரூ.1,910/– (2X500=1,000, 2X200=400, 5X100=500, 1X10=10) இருந்தது. அதை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க ரூ.100/–காலையில் அலுவலத்திற்கு வரும்போது எடுத்து வந்ததாகவும்

அதில் ரூ.90/– செலவு செய்தது போக மீதி பணம் ரூ.10/– என்றும் கூறினார். மேற்படி பணம் ரூ.10/– திரும்ப அவரிமே ஒப்படைக்கப்பட்டது. மீதிமிருந்த ரூ.1,900/– பற்றி விளக்கம் கேட்க சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி பணம் ரூ.1,900/– கைப்பற்றப்பட்டது.

ஓட்டுநர் திரு.பழனியப்பன், த/பெ ரெங்கையன் அவர்களை விசாரணை செய்ய அவரது சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, மேட்டுப்பட்டி என்றும், கடந்த 9 ஆண்டு காலமாக உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகத்தில் ஓட்டுநராகப் பணிபுரிந்து வருவதாக கூறினார். அவரை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த வெள்ளை நிற பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்கள் அடங்கிய ஒரு கத்தையை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்க்க அதில் ரூ.3,030/– (3X200=600, 21X100=2100, 5X50=250, 4X20=80) இருந்தது. அதை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க ரூ.130/– காலையில் அலுவலத்திற்கு வரும்போது எடுத்து வந்ததாகவும், அதில் ரூ.50/– செலவு செய்தது போக மீதி பணம் ரூ.80/– என்றும் கூறினார். மேற்படி பணம் ரூ.80/– திரும்ப அவரிமே ஒப்படைக்கப்பட்டது. மீதிமிருந்த ரூ.2,900/– பற்றி விளக்கம் கேட்க சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி பணம் ரூ.2,900/– கைப்பற்றப்பட்டது.

பிறகு உதவி இயக்குநர் (தணிக்கை) அவர்களிடம் இன்று (24.02.2020) தணிக்கை தடை நீக்கத்திற்கு வந்த அலுவலர்களின் விபரம் கேட்க அதற்கு அவர் தணிக்கை தடை நீக்கத்திற்கு வந்த அலுவலர்களுக்கு வருகைப்பதிவேடு அலுவலக உதவியாளர் ஸ்ரீதேவி என்பவரால் பராமரிக்கப்பட்டு, கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். எனவே மேற்படி வருகைப்பதிவேடு ஆஜர் செய்ய கூறியதன் பேரில் உதவியாளர் திருமதி. ஸ்ரீதேவி அவர்கள் அவரது அலுவலக அறைக்கு சென்று எடுத்து வந்து வருகைப்பதிவேட்டை ஆஜர் செய்தார். அந்த வருகைப்பதிவேடு கைப்பற்றப்பட்டது.

இச்சோதனையில் முடிவில் மேற்கண்ட உதவி இயக்குநர்(தணிக்கை) அலுவலகத்திற்கு தணிக்கை தடை நீக்கம் செய்வதற்காக 13 ஊராட்சி ஒன்றியத்திலிருந்து வந்திருந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்) மற்றும் உதவிப்பொறியாளர்கள் கணக்கர்கள் ஆகியோர்களிடம் உதவி இயக்குநர் (தணிக்கை) திரு.கணபதி, உதவியாளர் திருமதி. ஸ்ரீதேவி, அலுவலக உதவியாளர் திரு.தங்கராஜ் மற்றும் ஓட்டுநர் திரு.பழனியப்பன் ஆகியோர் லஞ்சமாக பெற்று வைத்திருந்த பணம் என்று தெரிய வந்ததின் பேரில் மேற்படி பணம் ரூ.24,800/– மற்றும் சுமார் 4 கிராம் தங்க நாணயமும் கைப்பற்றப்பட்டது. எனவே மேற்படி நபர்களின் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பம் (திரு.புவியரசன், வயது 37/2020, த/பெ சிவப்பிரகாசம், மண்டல துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை).

மேற்படி புகார் மனுவை பெற்று இன்று 24.02.2020ஆம் தேதி இரவு 23.30 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண். 01/2020 பிரிவு 102 கு.வி.மு.ச உ/இ 7 of PC (Amendment) Act-2018ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. S/d. வி.தமிழரசி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை நாள்.24.02.2020.

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் மற்றும் திடீர் ஆய்வு அறிக்கையையும் புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலகர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.

V. Tamizharasi 24/2/2020.
Inspr. / VAAC.
Pudukkottai